<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>

<u>ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>

**MCOP No: 161/2020** **நாள் 17.02.2026**

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியானவருக்கு நீதிமன்றத்தின் மூலமாக சாட்சிய சம்மன் எடுத்துக்கொள்ளப்பட்டு சர்வாகி அழைக்கப்பட்டு ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவரை இன்று **எ.ம.சா.3** ஆக 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் திருமதி.K.சுப்புலட்சுமி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | N.தலைமலை | தாலுகா | |
| த–பெ | நீராத்திலிங்கம் | தொழில் | சிறப்பு சார்பு ஆய்வாளர் ,<br>சேத்தூர் காவல் நிலையம் |
| கிராமம் | | வயது | 52 |

<u>முதல் விசாரணை</u>

சாட்சிய சம்மனில் சொல்லியுள்ள ஆவணங்களை நான் கொண்டு வந்துள்ளேன். கடந்த 05.10.2019ம் தேதியன்று மதியழகன் என்பவர் தன்னுடைய மகன் வாகன விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக எங்கள் காவல் நிலையத்தில் ஒரு புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் பேரில் மேற்படி சேத்தூர் காவல் நிலைய குற்ற எண்.225/2019 இதச பிரிவுகள் 279, 304 ஏ– ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் **எ.ம.சா.ஆ.3** .மேற்படி புகாரில் உண்மை தன்மை இல்லை என்று சொல்லி புகார் மனுவானதை MOF செய்து இறுதி அறிக்கையை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.அந்த இறுதி அறிக்கையின் உண்மை நகல் **எ.ம.சா.ஆ.4** . மேற்படி MOF அறிக்கையானதை மதியழகன் என்பவர் உண்மை சங்கதிகளை மறைத்து பண பலன் பெறுவதற்காக நடக்காத சம்பவத்தை நடந்ததாக மிகைப்படுத்தி புகார் கொடுத்துள்ளார் என்று சொல்லப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையானதை எ.ம.சாஆ.4 ஆவணப்படிக்கு முடிக்கப்பட்டது என்பதற்கான அறிவிப்பினை புகார்தாரருக்கு அனுப்பி அதனை புகார்தாரரால் பதிவு தபால் மூலமாக பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை குறித்து எமசாஆ.4 ஆவணத்தில் 17வது காலத்தில் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான்.

<u>குறுக்குவிசாரணை மனுதாரர்கள் தரப்பில்</u>

இந்த வழக்கானதை இதச பிரிவுகள் 279, 304 ஏ–ன் படி தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் . வாகனத்தை அதிவேகமாகவும்,

அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்றுஅந்த வாகன விபத்தில் ஒருவர் காயமுற்று இறந்துபோனால் இதச பிரிவுகள் 279, 304 ஏ-ன் படி வழக்கு பதியப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் பெயர் மதியழகன். இந்த வாகன விபத்தில் 1 ) ராஜகுரு மற்றொருவர் ஸ்டாலின் ஆகியோர் இறந்துபோய் உள்ளார்கள். இவ்வழக்கில் இறந்துபோன ஸ்டாலின் என்பவரின் அப்பா தான் மேற்படி புகார்தாரர் மதியழகன் என்றால் சரிதான். இந்த வாகனத்தில் பின்னாடி அமர்ந்து சென்று வாகன விபத்தில் இறந்துபோனவர் தான் ஸ்டாலின் . அப்போது அவர் இளவர். இந்த வழக்கு சம்மந்தமாக நான் புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை. இந்த வழக்கு சம்மந்தமான விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது . கோப்பின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். MOF ஆக முடிப்பதற்கு முன்பாக புகார்தாரரான மதியழகன் என்பவருக்கு நாங்கள் அறிவிப்பை அனுப்பியதாக சொல்லும்போது அவரை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பெறப்பட்டுள்ளதா என்று கேட்டால் வாக்குமூலம் பெறப்பட்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு புகார்தாரர் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தை நான் இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் அவ்வாறு முதல் தகவல் அறிக்கையை MOF ஆக பாவித்து குற்ற இறுதி அறிக்கையாக தாக்கல் செய்ததாக சொல்லப்படும் போது மேற்படி புகார்தாரருக்கு நாங்கள் அனுப்பியதாக சொல்லப்படும் அறிவிப்பு மற்றும் வாக்குமூலம் , நீதிமன்றத்தால் MOF ஆக முடிக்கப்பட்டது என்பதற்கான உத்தரவின் நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி MOF அறிக்கையானதை மதியழகன் என்பவர் உண்மை சங்கதிகளை மறைத்து பண பலன் பெறுவதற்காக நடக்காத சம்பவத்தை நடந்ததாக மிகைப்படுத்தி புகார் கொடுத்துள்ளார் என்று சொல்லப்பட்டதாக உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இது குறித்து புகார்தாரரை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் புகார்தாரர் அவ்வாறு சொல்லியுள்ளாரா என்று தெரியவரும் என்றால் சரிதான். MOF ஆக முடிக்கப்பட்டது என்பதை பொறுத்து அப்போது இருந்த புலன் விசாரணை அதிகாரியை விசாரித்தால் தான் தெரியும் என்றும் அதுபோல் புகார்தாரரின் வாக்குமூலம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு ஆகியவைகளை தாக்கல் செய்யப்பட்டால் தான் நான் சொல்லும் மேற்படி பண பலன் பெறுவதற்காக இந்த வழக்கு முடிக்கப்பட்டது என்ற உண்மை தெரிய வரும் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை அனுமதியுடன்</u>**

புகாரானதை ராஜகுரு என்பவருக்கு எதிராக தான் கொடுக்கப்பட்டிருந்து அதன் பேரில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை - இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 17th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.